1989 பிப்ரவரி 21] [திரு. பொன். முத்துராமலிங்கம்]

வேண்டியிருக்கிறது. மத்தியப் பிரதேசம் விதித்திருக்கிற சில நிபந்தனைகள் காரணமாக அந்த இலையைக் கொண்டுவருவதில் சற்று தேக்கம் ஏற்பட்டிருக்கிறது. இது குறித்து தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள்—அரசின் கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். நம்முடைய அதிகாரிகள் மத்தியப் பிரதேச அரசுடன் கலந்து ஆலோசிக்கும் சூழ்நிலை உருவாகியிருக்கிறது. விரைவில் அதற்கான முடிவினை இந்த மன்றத்திலே அறிவிக்கிறேன்.

(முற்பகல் 9-20)

(உ) மெட்டல் பாக்ஸ் தொழிலாளர் பிரச்சினை.

திரு. உ. ரா. வரதராசன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்றம் இன்றைக்கு கடைசி நாளாக நடக்கின்ற காரணத்தினாலே, கடைசி தினத்தன்று இரண்டுக்கும் மேற்பட்ட கவன ஈர்ப்புத் தீர்மானங்கள்கூட எடுத்துக்கொள்வது வழக்கம். நான் 'மெட்டல் பாக்ஸ்' தொழிலாளர் பற்றி ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துப் பல நாட்கள் ஆகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது குறித்து இன்றைய நிலைமை என்ன என்பது பற்றி விளக்கினால் உதவிகரமாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, சென்னையிலே இயங்காமல் இருக்கக் கூடிய 'மெட்டல் பாக்ஸ்' நிறுவனத்தைப் பற்றி, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே வினா எழுப்பியுள்ளார்கள். மெட்டல் பாக்ஸ் நிறுவனம் நீண்டகாலமாக மூடப்பட்டு, தொழிலாளர்கள் வேலையில்லாமல் இருக்கின்றார்கள். இதை இந்த அரசு பொறுப் பேற்ற உடனேயே அரசினுடைய கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மூலமாக வந்தவுடன், பி.ஐ.எஃப்.ஆர். டெல்லியிலே நடைபெற்ற விசாரணையின்போது முதல் முயற்சி யாக அரசாங்கத்தின் சார்பாக மாநிலத் தொழிலாளர் நல ஆணை யாளர் அனுப்பி வைக்கப்பட்டு தொழிலாளர்களுடைய பங்கு பற்றி அங்கு எடுத்துச் சொல்வதற்கு ஏற்பாடு செய்யப்பட்டது. தொடர்ந்து நாங்கள் அதற்கான முயற்சியிலே ஈடுபட்டிருக் கிறோம். நிர்வாகத்தோடும் அரசின் சார்பாக பேச்சு வார்த்தை

நடைபெற இருக்கிறது. எனவே ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாகச் சொல்லிக்கொள்கிறேன்.

திரு. உ. ரா. வரதராசன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அருள்கூர்ந்து திரு. வரத ராசன் அவர்கள் உட்காரவேண்டும். அதுவே அவசரப்போது முக்கியம் வாய்ந்தது அல்ல. உங்களுக்காக ஒரு வாய்ப்புத்தான் கொடுத்தேன். அந்த வாய்ப்பை மிகுதியும் பயன்படுத்திக் கொள்ளக்கூடாது.

திருமதி எஸ். பி. சற்குணம் : மாண்புமிகு பேரவைத் தலைவ ரவர்களே, 'மெட்டல் பாக்ஸ்' நிறுவனம் பற்றி அருமை உறுப் பினர் குறிப்பிட்டு ஒரு கேள்வியை எழுப்பி இருக்கின்றார்கள். இது என்னுடைய தொகுதியைச் சார்ந்த நிறுவனமாக இருக்கின்ற காரணத்தினால், தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி, ஏற்கெனவே மராட்டிய மாநிலத்திலே தேவநார் பகுதியிலே இருக் கின்ற ஒரு 'டின் பேக்டரியும், மங்களூர் பகுதியிலே இருக்கின்ற 'டின் பேக்டரி'-யும் மூடப்பட்ட நிலைமை மாற்றப்பட்டு, அங்கே அரசாங்கத்தின் சார்பாக பேச்சுவார்த்தை நடத்தி, அந்த நிறு வனம் மீண்டும் நடைபெறுகின்ற சூழ்நிலை ஏற்பட்டு தொழிலாளர் கள நன்மை அடைந்திருக்கின்றார்கள். எனவே அரசு சார்பில் நடத்தப்படுகின்ற பேச்சு வார்த்தையில், இதையும் கவனத்தில் கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. பொன். முத்துராமலிங்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மெட்டல் பாக்ஸ்' நிறுவனத்தி னுடைய பல்வேறு கிளைகள் பல மாநிலங்களில் பரவி இருக் கின்றன. இதிலே மராட்டிய மாநிலத்திலே உள்ள தொழில் நிறுவனம் பேச்சுவார்த்தை நடத்தி சுமூகமான முடிவினை ஏற்படுத்தியிருக்கிறது, அதையும் அரசு கவனத்தில் எடுத்துக் கொள்ளுமா என்று வினா எழுப்பியிருக்கிறார்கள். நிச்சயமாக அவற்றையும் கவனத்திலே எடுத்துக்கொண்டு இணக்கமான முடிவுகள் ஏற்படுவதற்கு அனைத்து முயற்சிகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்று தெரிவித்துக் கொள்கிறேன்.